# சித்தர்கள் பார்வையில் சாதி மறுப்புப் சிந்தனைகள்

**மு. சத்தியமூர்த்தி[1] & முனைவர். கோ. சாந்தமூர்த்தி [2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்),**

**[2]நெறியாளர்,இணைப்பேராசிரியர்,**

**முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,**

**கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி,**

**திருவண்ணாமலை - 606 603. மின்னஞ்சல் : sathiyamoorthykm1982@gmail.com**

29

**ஆய்வுச் சுருக்கம்**

நாம் சித்தர்கள் என்றால் பித்துப்பிடித்து அலைகிறவர்கள், காடு மலைகளில் திரிகிறவர்கள், உலகத்தைப் பற்றி அக்கறையில்லாதவர்கள் என்று நினைத்திருப்போம். ஆனால், சித்தர்கள் தன்னறிவுப் பெற்றுத் தன்னை உயர்த்தி கொண்டது மட்டுமில்லாமல் தன்னுடைய அனுபவத்தை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும் என்றும், சமுதாயத்திற்கு நல்ல வழிகாட்ட வேண்டும் என்ற எண்ணத்திலும் சமூகத்திற்குப் பாடல்களின் மூலம் பல நன்மைகளை முன் வைத்துள்ளனர்.

சித்தர்களின் பார்வையில் சமூகம் ஒரு சீர்கேடு உடையதாகவே காணப்பட்டுள்ளது. அதனைச் சீர்திருத்தும் நிலையில் பல கருத்துகளைக் கூறியுள்ளனர். சாதி, சமய எதிர்ப்பு சிந்தனை, அறச்சிந்தனை, பெண்ணியம் சார்ந்த சிந்தனை மக்களுக்குப் பயனளிக்கும் மருத்துவம் சார்ந்த சிந்தனைகள் ஆகியவற்றை விவரித்துக் கூறும் வகையில் பன்முக நோக்கில் சித்தர் இலக்கியங்கள் அமைந்துள்ளது.

சித்தர்கள் சாதி, சமயம், சாத்திரம், சடங்கு இவற்றை எல்லாம் எதிர்த்ததோடு மட்டுமின்றி தனக்குள் புதைந்து கிடக்கும் ஞான பரம்பொருளான கடவுள் சித்தாந்தத்தை யோக நெறிகளாலும் தியான நிலையிலும் அடைந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்த உருவ வழிபாடு மற்றும் சிலை வழிபாட்டை மறுத்து மதங்களாலும் சாத்திரங்களாலும் தோற்றுவிக்கப்பட்ட சாதி சமய கோட்பாடுகளை முழுவதுமாக எதிர்க்கும் நோக்கில் சித்தர்கள் பாடல்களின் வாயிலாக வெளிக்காட்டியுள்ளது.

கடவுள் சித்தாந்தத்தை எளிமையான முறையில் சொல்வதோடு சமூக சீர்கேடுகள் நிறைந்து காணப்படும் இந்த சமுதாயத்தை சீர்திருத்தம் செய்யக்கூடிய வழிமுறைகளையும் எடுத்துக்கூறி மக்களை நல்வழிப்படுத்தும் உயர்ந்த சிந்தனைகளும் சித்தர்கள் பாடல்களில் இடம்பெற்றுள்ளன. அதன் அடிப்படையில் சித்தர்கள் பாடல்களில் சாதி மறுப்புச் சிந்தனைகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பது குறித்து இக்கட்டுரை அமையப் பெற்றுள்ளது.

**முன்னுரை**

தமிழில் காலம் காலமாகப் பேசப்பட்டு வரும் சங்க இலக்கியம், பக்தி இலக்கியங்களைப் போல சித்தர் இலக்கியமும் இன்றைய நடைமுறையில் இருந்து வருகிறது. சித்தர் இலக்கியம் தமிழில் தனி வகை இலக்கியம், குறியீட்டு இலக்கியம், காலந்தோறும் வளர்ந்த இலக்கியம்இ தத்துவ இலக்கியம் என்றெல்லாம் பேசப்பட்டு வருகிறது. மற்ற இலக்கியங்களில் தலைவனையோ கடவுளையோ முதன்மைப்படுத்தி அவர்களைப் பற்றிய சிந்தனையை ஏற்படுத்துகிறது. ஆனால் சித்தர் இலக்கியம் தன்னை அறிதல் என்ற தத்துவத்தை முன் வைக்கிறது.

உண்மைப் பொருளைப் பற்றி எழுதப்பட்ட சிந்தனைகள்தான் சித்தர்கள் இலக்கியம். இந்த வகை இலக்கியங்கள் தமிழில் சோழர் காலத்திலும் இதற்கு முற்பட்ட காலத்திலும் சித்தர்களால் எழுதப்பட்டவை. மொழியிலும் நடையிலும் பாடல் வடிவத்தாலும் நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்குமிக்கது.

சித்தர்கள் பார்வையில் சாதி மறுப்புப் சிந்தனைகள் என்பது ஆய்வுப் பொருளாகும். தமிழில் காணப்படும் இலக்கியங்களில் ஒன்றான சித்தர் இலக்கியத்தில் பயின்றுள்ள சமூகச் சிந்தனைகளை இவ்வாய்வுக் கட்டுரை வெளிப்படுத்த முயல்கிறது.

சித்தர் இலக்கியங்களில் எண்வகை சித்துக்கள்இ அட்டயோகங்கள், தத்துவங்கள், மருத்துவம் சார்ந்த பல சிந்தனைகள் இருப்பினும் சித்தர்களின் எதிர்ப்புச் சிந்தனைகளும் வாழ்வியல் சிந்தனைகளும் இடம்பெறுகின்றன. இம்மை, மறுமை என்னும் இருமைப் பயன்களை அறிவுறுத்தும் அறம் சார்ந்த சிந்தனைகளையும் சித்தர்கள் தங்களது பாடல்கள் வாயிலாக சமூக வளர்ச்சிக்கான வழிமுறைகளை அறிவுறுத்தியுள்ளனர்.

கடவுள் நிலையை முழுமையாக அடைந்தவர்கள் சித்தர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் கடவுள் நிலையை அடைவதற்கு சாதி, சமயம், சாத்திர வேதம், உருவ வழிபாடு இவை எதுவும் துணை நிற்கவில்லை. சித்தர்கள் ஒவ்வொருவரும் தன்னை உடலாலும் மனதாலும் வருத்திக்கொண்டு நீண்டதொரு தவநிலையை பின்பற்றி அடைந்தனர். உண்மையான பரம்பொருளை அடைந்ததாக சொல்லப்படுகிற சித்தர்கள் யாரும் சாதியின் பெயரால் தீண்டாமை, ஏற்றத்தாழ்வுகளை முன்னிருத்தவில்லை. இன்றைய நவீன காலத்திலம் கூட சில இடங்களில் சாதி பிரிவினை மூலம் இந்த சமூகத்தினர் கோவிலுக்கு வரக்கூடாது இது உயர் சாதியினருக்கான கட்டிய கோவில் என்று செய்திகள் வருவதும் குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற பல்வேறு சாதி மறுப்புக் கொள்கைகளை வெளிப்படுத்தும் நோக்கில் இந்த ஆய்வுக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**சித்தர்களின் அடையாளம்**

சித்தர்கள் பற்றிய செய்திகள் பலவாறாகப் பேசப்படுகின்றன. சித்தத்தை வென்றவர், சித்து வேலை செய்தலில் வல்லவர், எந்தக் கட்டும் இல்லாமல் எதைப்பற்றியும் எவரைப்பற்றியும்

எள்ளளவும் கவலைப்படாமல் திரிபவனைச் சித்தன்போக்கு சிவன்போக்கு என்பது உலக வழக்காகச் சொல்லப்படுகிறது. “சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்”1 என்று சித்தர் தன்மையை கூறுகிறார் மாணிக்கவாசகர்.

“சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்

சுத்தா சுத்தத்துடன் தோய்த்தும் தோயாதவன்”2

என்று திருமூலரும் “ஊதியதோர் ஊதறிந்தால் அவனே சித்தன்”3 என்று அகத்தியரும் சித்தர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். மேலும் சித்தர்களின் நிலையினைப்பற்றி, பட்டினத்தார் பாடலில்

“பேய்போல் திரிந்து பிணம்போல
கிடந்து இட்டபிச்சை எல்லாம்
நாய்போல் அருந்தி நரிபோல்
உழன்று நன் மங்கையரைத்
தாய்போல் கருதி தமர்போல்
அனைவருக்கும் தாழ்மை சொல்லி
சேய்போல் இருப்பர் கண் டீர்
உண்மை ஞானம் தெளிந்தவரே”4

இவ்வாறான சித்தர்களைப்பற்றியும் பாடல்களில் உணர்த்தப்படும் சமூக சிந்தனைகளைப்பற்றியும் ஆராய்வதாக இவ்வாய்வேடு அமைகிறது.

சித்தர்கள் எத்தனை பேர்

“சித்தர் பதினெண்மர் செய்கையில் தோன்றாத

அத்தனருளும் புசுண்டன் யான்”5

சித்தர்கள் பதினெண்மர் என்பதை காகபுசுண்டர் பாடலின் மூலம் அறியமுடிகிறது. பதினெண் சித்தர் என்பது ஒருவித கணக்கில் அடங்கும். அதாவது ஒவ்வொரு எண்ணுக்கும் ஒரு மதிப்பு இருந்துள்ளது. அதன் அடிப்படையில் பதினெண்மேற்கணக்கு, பதினெண்கீழ்க்கணக்கு, பதினெண்மொழி, பதினெண்கணம், பதினெண் புராணம் என்பதுபோல பதினெண் சித்தர்கள் என்று வழிவழியாகச் சொல்லப்பட்டு வருகிறது. சித்தர் பாடல் திரட்டு, பெரிய ஞானக்கோவை என்ற நூல்களில் பதினெட்டு சித்தர்கள் என்ற எண்ணிக்கையில் அடங்குகின்றனர். ஆனால் இன்றைய நிலையில் எண்ணில் அடங்கா உருவாகியுள்ளனர். இருப்பினும் பதினெண் சித்தர்களையே ஏற்றுக்கொண்டுள்ளோம். பண்டைய தமிழகத்தில் வாழ்ந்த சித்தர்கள் எண்ணிக்கையில் பதினெண்மர் சொல்லப்படுகின்றனர். கருவூரார் எழுதிய அட்டமா சித்து என்ற நூலில் 1.கும்பமுனி, 2.நந்திமுனி, 3.கோரக்கர், 4.புலிப்பாணி, 5.புசுண்டரிஷி, 6.திருமூலர், 7.தேரையர், 8.யூகிமுனி, 9.மச்சமுனி, 10.புண்ணாக்கீசர், 11.இடைக்காடர், 12.பூனைக்கண்ணர், 13.சிவவாக்கியர், 14.சண்டிகேசர், 15.உரோமருஷி, 16.சட்டநாதர், 17.காலாங்கி, 18.போகர் என பதினெட்டு சித்தர்களே வாழ்ந்துள்ளதாக அறியமுடிகிறது. இவர்களின் காலத்தைச் சரியாக

வரையறுத்துக் கூற முடியாத நிலையே உள்ளது. கி.பி.14 முதல் 17-ஆம் நூற்றாண்டு வரை உள்ள இடைப்பட்டக் காலம் சித்தர்கள் காலம் ஆகும். தொல்காப்பியருக்கு முன் அகத்தியர் என்றும் தொல்காப்பியருக்குப் பின் திருமூலர் என்றும் திருமூலருக்குப் பிறகு சித்தர் மரபு என அறிய முடிகிறது. தமிழ்நாட்டைப் போலவே வடநாட்டிலும் சித்தர்கள் உள்ளனர். அவர்களை நவநாத சித்தர்கள் என்பர். சித்தர்கள் எந்தக் காலத்திலும், எந்த நாட்டிலும், எந்தக் குலத்திலும் தோன்றுவர். வரையறை ஏதும் இல்லை.

**சித்தர்களின் சாதி மறுப்பு**

சாதி பேதம், மத பேதம் பாராட்டுவது அர்த்தமற்றது. மனித சாதி என்பது ஒன்றுதான். ஒரு சாதிதான் ஒரு இனந்தான் பல்வேறு பிரிவுபோலக் காட்சியளிக்கிறது. இவ்வுண்மையை உணராதவர்களே சாதி பேதம் பாராட்டுவர். தெய்வம் பல என்று பொய், ஒரே தெய்வம் தான் உண்டு. ஆதலால், தெய்வங்களின் பெயரால் சண்டைகள் வேண்டாம் என்று வாலைக்கும்மி இதனை,

“சாதிபேதம் சொல்லுகிறீர் தெய்வம்
தானென் றொருவுடல் பேதமுண்டோ
ஓதிய பாலதிலொன்றாகி யதிலே
உற்பத்தி நெய் தயிர்மோ ராச்சு”6

என்ற பாடலில் பால் ஒன்றுதான் அதிலிருந்து நெய், தயிர், மோர் உற்பத்தியாகின்றன.

நெய் பிறப்பது ஒரு பால், தயிர் உண்டாவது ஒரு பால், மோர் தோன்றுவது ஒரு பால் என்று பாலில் வேறுபாடில்லை. அதுபோல மனித சாதிதான் பல்வேறு உருவில் காணப்படுகிறது. ஒரே தெய்வம்தான் பல்வேறு தெய்வங்களாகக் காணப்படுகிறது. இந்த உண்மையை உணர்ந்து ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்றவாறு சாதி மறுப்பு குறித்து பாடியுள்ளார்.

சித்தர்கள் சாதியப் படிநிலைகளையும் ஏற்றத் தாழ்வுகளையும் கடுமையாக எதிர்த்தனர். சாதிகளால் சீரழிந்த மனித இனத்தையும் சிதறுண்ட தமிழ்ச் சமுதாயத்தையும் சீர்படுத்த சாதியத்தின் வேரறுக்கும் கவிதை வாளைக் கொண்டு வந்தனர் சித்தர்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பில் நின்று அவர்களும் மதிக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்தனர். கி.பி 15-ஆம் நூற்றாண்டில் சித்தர்களது சமகாலத்தில் மகராட்டிரத்தில் துக்காராமும் கி.பி 18-ஆம் நூற்றாண்டில் பூணூலை அறுத்தெறிந்த பாஸ்கரானந்தரம் சாதி ஒழிப்புக்குக் குரல் கொடுத்தனர்.

அந்தணர், அரசன், வணிகன், வேளாளர் இவர்களில் உயர்வாக மதிக்கப்பட்டவர்கள் முதல் மூன்று பேரும் ஆவர். இவர்களால் பாமர மக்கள் மிகவும் சாதிக் கொடுமைக்கும் ஏற்றத் தாழ்விற்கும் ஆளாகினர். இதனை எதிர்த்து பாமர மக்களுக்கு ஆதரவாய் சித்தர்கள் நின்றனர். சாதி பேதங்கள் மனிதர்களினாலன்றி வேறு எவராலும் ஏற்படுத்தவில்லை. அப்படியிருக்க அவை ஒன்றையே பெரிதென எண்ணி மற்றவர்களை இழிவுபடுத்துவதைச் சித்தர்கள் விரும்பவில்லை. இவ்வுலகில் மக்கள் சிறப்புடன் வாழ்வதற்காகவே சாதிகள் தோன்றின ஒவ்வொருவரும் தொழில் செய்து

பிழைப்பதற்காகவே இவை தொகுப்பட்டன. இந்த ஒவ்வொரு தொழிலுக்கும் இலக்கணம் வகுத்துள்ளனர். அதன்படி தொழில் செய்பவனே சிறந்தவன் என்று

“தொல்லுகில் நாற்சாதி அநேகம்சாதி

தொகுத்தார்கள் அவரவர்கள் பிழைக்கத்தானே”7

என்று வால்மீகர் சொல்கிறார். இவர் சொல்வதுபோல மனிதன் தான் செய்கின்ற தொழில் தான் உயர்வு தாழ்வு ஏற்படுகிறதே ஒழிய நிறத்தாலும் மொழியாலும் உடலமைப்பாலும் வேறுபாடு இல்லை. இதனை வள்ளுவரும் தன் குறளில் காட்டுகிறார்.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தாழில் வேற்றுமை யான்”8

என்கிறார். பிறப்பிலே உயர்வு, தாழ்வு என்பது பிறப்பது இல்லை. சாதி வேறுபாடுகளுக்குச் சமயங்களும் ஒருவகையில் காரணமாகிறது. தோற்றத்திலும்; சாதியினைக் கண்டனர். ஞானிகளும் சித்தர்களும் தாழ்ந்த இனத்தவரைப்போல இருப்பதால் அவர்களையும் ஈனசாதியர் என்று இகழ்ந்தனர். அதுமட்டுமல்லாமல் ஞானிகளைச் சைவர்கள் கல்லால் எறிந்தனர் என்ற குறிப்பும் காணப்படுகிறது. இதனை,

“ஞானம் பதியா இழிகுலத்தோர் நாட்டிப் பிரித்தே சாதி தன்னை

ஈனசாதி யாரென்றே இகழ்ந்தார் மூத்தர் பத்தரையும்”9

என்ற பாடலிலும்

“தாரான தாதரும் தலத்திலுள்ள சைவரும்

கூதரைப் பறைச்சி மக்கள் கூடிச்செய்த காரியம்”10

என்ற பாடலிலும் மேற்கண்ட கருத்தினைக் காணலாம். இப்படி தோற்றத்தில் சாதிப்பிரிவினையைப் பார்த்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட இனப்பெண்களைக் கோவிலுக்குள்ளும், மடங்களுக்கும் அடிமையாக விற்கப்பட்டனர் என்றும் நெற்குற்றுவதற்காக ஐந்து பெண்கள் கோவிலுக்குத் தானமாக வழங்கப்பட்டனர் என்றும் சோழர்காலக் கல்வெட்டு குறிக்கிறது. இந்த சாதிய வேறுபாடானது சித்தர் காலத்தில் மட்டுமல்லாமல் இதற்கு முன்பாகவே தாழ்த்தப்பட்டவர்களைக் கேலியாகச் சித்தரிக்கும் பல வரிகள் காணப்படுகின்றன.

“இலக்கணையின் கண் வண்ணம்

சேரியில் உள்ளோரின் வண்ணமான கருமை”11

என்று சீவகன் சொல்வதாக ஒரு வரி காணப்படுகிறது. இதில் சேரியில் வாழ்பவர் கருப்பு நிறத்தவர் என்று ஒதுக்கப்படுகின்றனர். மேலும் புலைசூழ் வேள்வி புலைமகள் என்ற சொல்லாடலும்

"புல்லலோம்பன்மின் புலைமகனிவனென"12

என்ற வரியில் புலையர்கள் தீண்டத்தகாதவர்களாக நடத்தப்பட்டனர் என்றும் சான்றுகள் காணப்படுகின்றன. இதுபோன்று தாழ்ந்த மக்களைப் பலவாறான துன்பத்திற்கு ஆளாக்கியுள்ளனர். இதனை எதிர்த்து சித்தர்கள் குரல்கொடுத்தது மட்டுமின்றி அவர்களுடன் உறவு வைத்து வாழ்வோம் என்றும் இந்த வீதியில் விளையாடுவோம் என்பதை

"வீதிப்பிரிவினிலே விளையாடிடுவோம்
வேண்டாத மனையினில் உறவு செய்வோம்"13

என்கிறார் பாம்பாட்டிச்சித்தர்.

சாதி, மத வேற்றுமைகளை எதிர்த்து சித்தர்கள் பலமாகத் தாக்கியுள்ளனர். சாதிமாத வேற்றுமைகளைப் புறக்கணித்து என் சாதி - அதாவது என் குலம் சுக்கிலம் தான் என்று கூறுகிறார். மேலும் சாதிபேதம் உண்டென்று சொல்லுகின்றவன் விரைவில் அழிந்து போய்டுவான் என்றும் சபிக்கிறார். இதனை,

"காண் அப்பா சாதி குலம் எங்கட் கில்லை
கருத்துடனே என்குலம் சுக்கிலந்தான் மைந்தா
தோணப்பா தோணாமல் சாதி பேதம்
சொல்லுடவான் சுருக்காகச் சுருண்டு போறான்"14

என்கிறார் காகபுசுண்டர். இவர் மனிதன் பிறக்கக் காரணமான விந்துவைத்தான் தன் சாதி குலம் என்கிறார். ஏனெனில் அவற்றிலிருந்து தான் உயிர்கள் உருவாகிறது என்று விளக்குகிறார். இதுமட்டுமில்லாமல் சாதிகள் இல்லாத உலகத்தில் வாழ்வது எக்காலம் என்ற ஏக்கத்தையும் பதிவு செய்துள்ளனர். இதனை,

"ஆதிகபிலர் சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை இல்லாமல் சஞ்சரிப்பது எக்காலம்"15

என்கிறார் பத்திரகிரியார். இவருடைய ஏக்கம் இன்னும் தீர்ந்த பாடில்லை. காலம் காலமாகச் சாதிகள் இருந்துகொண்டுதான் வருகின்றன.

சாதிகளை எதிர்த்து சித்தர்களுக்கு அடுத்ததாகப் பெரியார், அம்பேத்கார், பாரதி, பாரதிதாசன் போன்றோரும், ஒடுக்கப்பட்டோருக்காக நெல்சன் மண்டேலா போன்ற எத்தனையே சான்றோர்கள் தோன்றியும் கூட சாதியை அழிக்க முடியவில்லை. இதுபோன்ற சாதிகளை இன்றுள்ள அரசாங்கமே அங்கிகரித்து அதற்கான சான்றிதழ்களை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சித்தர்கள் பலவித சாதிகளை எதிர்த்த நிலையிலும் அதற்கான தீர்வுகள் சரியான முறையில் செயல்படுத்தபடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"சாதிப் பிரிவுகள் சொல்லி அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார் அங்கு

நித்தமும் சண்டைகள் செய்வார் என்று”16

என்று பாரதி சொன்னதுபோல இன்றைய நிலையில் சாதிப்பிரிவுகளை வைத்து பல சிக்கல்களை ஏற்படுத்துகின்றனர்.

அறியாமையை நீக்குவதற்கு அமைக்கப்பட்ட கல்வி கூடத்தில் அடிமைத்தனத்தை வளர்க்கும் சாதி சான்றிதழும், சாதி வாரியான இட ஒதுக்கீடும் நம்மால் காணமுடிகிறது. மேலும், சாதிகளின் பெயரால் மடங்களும், மண்டபங்களும் உருவாவது இன்றைய சூழலில் பெருகியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

**சித்தரின் சமூகச் சீர்த்திருத்தம்**

சித்தர்களில் பலர் சமூகம் சார்ந்த கருத்துகளையும் எதிர்ப்பு சிந்தனைகளையும் தம் பாடல்கள் மூலம் எடுத்துரைத்துள்ளனர். இருப்பினும், சமூகச் சீர்த்திருத்தவாதியாக திகழ்ந்தவர் சிவவாக்கியச் சித்தரேயாவார். இவர் சமுதாயத்தில் பரவியிருக்கும் சாதிப்பிரிவினைகளை வேரறுக்கும் வகையில் தனது பாடல்களில் சாதி மறுப்புச் சிந்தனைகளை அதிகமாகப் பதிவு செய்துள்ளார்.

சிவவாக்கியர் இந்த மனித உடலானது ஐவகைப் பூதங்களையும் பூதவாசல்களையும் கொண்டதாக உருவாக்கப்பட்டது. இவை அனைவருக்கும் பொதுவான பிறப்பு. இதில் என்ன சாதிவேறுபாடு? காதில் போடும் ஆபரணங்களாகிய வாளிஇ காரைஇ கம்பிபாடகம் என்று பேர் வெள;வேறாக இருந்தாலும் பொன் ஒன்றே ஆகும். அதுபோல எல்லா சாதிகளும் ஒன்றேயாகும். இதில் கீழ்சாதி உயர்சாதி என்று எதுவும் கிடையாது என்பதை,

“சாதியாவ தேதடா கலந்திரண்ட நீரலோ
பூதவாச லொன்றாலோ பூதமைந்து மொன்றலோ
காதில்வாளி காரைகம்பி பாடகம் யொனொன்றலோ
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே”17

என்று குறிப்பிடுகிறார்.

அந்தணர், வன்னியர், நாயுடு போன்ற மேல்சாதியினர் சாதிமாறிய திருமணத்தை எதிர்த்து கீழ்சாதியினருடன் பகையாக இருந்தனர்.அணவக் கொலை இவ்வாறு எதிர்த்து நின்றவர்களைப் பார்த்து சித்தர் சிவவாக்கியர்

“மேதியோடு மாவுமே விரும்பியே புணர்ந்திடில்
சாதிபேத மாயுருத் தரிக்கும்வாறு போலவே
வேதமோது வாறுடன் புலைச்சிசென்று மேவிடில்
பேதமாய்ப் பிறக்கிலாத வாறதென்ன பேசுமே”18

இந்தப்பாடலில் குதிரையும் கழுதையும் புணர்ந்து உருவாவது கோவேறு கழுதை. இதுமாறுபட்ட மிருகங்களின் இணைவால் புதிய மிருக இனம் தோன்றும். ஆனால் சாதி மீறிய மனிதர்களின் திருமணத்தில் பிறக்கும் குழந்தைகள் வேறுபாடான உருவத்துடன் பிறப்பது இல்லை என்கிறார்.

இதனைப் புரிந்து கொள்ளாத மக்கள் சாதி மாறிய திருமணத்தை எதிர்த்து பல போராட்டங்களையும் உயிர் இழப்பும் ஏற்படுத்துகின்றனர். சாதிமத வேற்றுமையை உண்மையான குருமார்கள் நம்புவதில்லை. சாதிமத வேற்றுமைகளை எதிர்த்தும் புறக்கணித்தும் சித்தர்கள் தங்களின் பாடலில் பதிவு செய்கின்றனர்.

**முடிவுரை**

தனிமனித வாழ்வியலைச் சீர்திருத்தும் வகையில் பல்வேறு அறச்சிந்தனைகளைச் சித்தர்தம் பாடல்களில் எடுத்துரைப்பது குறிப்பிடத்தக்கது. அதனடிப்படையில் மனிதன் பொய், களவு, பிறரைத் துன்புறுத்தல் போன்ற தீய செயலைச் செய்யாமல் நல்ல செயல்களைச் செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்தும் வகையில் அறச்சிந்தனைகள் இடம்பெறுகின்றன.

சமுதாயத்தில் நிகழக்கூடிய சாதி, சமய வேறுபாடுகளையும், இறைவன் பெயரில் ஏற்படுத்தபோகும் மூடநம்பிக்கை, பல்வேறு சடங்குகள் போன்றவற்றை மறுத்தும் சித்தர்கள் சமுதாயம் சார்ந்த சிந்தனையை கூறியுள்ளனர்.

சமுதாயத்தைச் சீர்திருத்தும் நோக்கில் சித்தர்களின் பாடல்கள் அமைந்துள்ளன. மேலும், சித்தர்கள் இறைவனைத் தம் ஞானத்தின் மூலமாகவே அடைந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

சித்தர்கள் சமுதாயத்தின் மீது அக்கறை இல்லாதவர்கள் போல அலைந்து திரிந்தாலும் தம் சிந்தனைகள் அனைத்தையும் சமூகச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தும் விதமாகவே பாடல்களை வழங்கியுள்ளார்.

மக்களின் மனதில் ஏற்பட்டுள்ள தவறான அவநம்பிக்கைகள் மற்றும் சாதிஇ சமயஇ சாத்திரம் பற்றிய எதிர்மறைச் சிந்தனைகளை மறுத்து சிவவாக்கியர் சமூகத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் என்பதை இவரது பாடல்களின் வழி அறிய முடிகிறது.

மேலும் சிவவாக்கியர் சித்தர்களில் ஒருவராக இருந்தாலும் மக்களின் சமூகச் சிந்தனைகளுக்குத் தன் பாடல்களில் தீர்வு கண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தியுள்ளார்.

**விளக்கம்**


1. மெய்யப்பன் ச, சித்தர் தத்துவம் ப. 60
2. மேலது, ப.60
3. மேலது, ப.61
4. மேலது, ப.25
5. மேலது, ப.64
6. சாமி சிதம்பரனார், சித்தர் கண்ட விஞ்ஞானம் தத்துவம், ப.111
7. முனைவர் ஆ.கருணாநிதி, சித்தர் இலக்கியத்தில் சமூகப்பார்வை ப.124
8. திருக்குறள், குறள்.
9. முனைவர் ஆ.கருணாநிதி, சித்தர் இலக்கியத்தில் சமூகப்பார்வை ப.119
10. மேலது, ப.119

11. முனைவர் க.பூரணச்சந்திரன், தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர் ப.33
12. மேலது, ப.34
13. முனைவர் ஆ.கருணாநிதி, சித்தர் இலக்கியத்தில் சமூகப்பார்வை ப.71
14. சாமி சிதம்பரனார், சித்தர் கண்ட விஞ்ஞானம் தத்துவம், ப.124
15. முனைவர் ஆ.கருணாநிதி, சித்தர் இலக்கியத்தில் சமூகப்பார்வை, ப.125
16. வீ.வீ.கே.சுப்புராசு, பாரதியார் கவிதைகள், ப.361
17. முனைவர் கருணாநிதி ஆ, சித்தர் இலக்கியத்தில் சமூகப்பார்வை, ப.118
18. வடிவேலு முதலியார் மா, சிவவாக்கியார் பாடல், ப. 354

**துணை நூற் பட்டியல்**

1. இளங்குமரன் இரா - சித்தர் பாடல்கள் சிவவாக்கியம்
தென்னிந்திய தமிழ்ச்சங்கம்,
79, பிரகாசம் சாலை, சென்னை.

2. இராமச்சந்திரன் எஸ். பி - சித்தர் வரலாறு
தாமரை நூலகம்,
சென்னை – 600026.

3. சாமி சிதம்பரனார் - சித்தர் கண்ட விஞ்ஞான தத்துவம்
சிவகாமி சாமி சிதம்பரனார்,
இலக்கிய நிலையம்இ
19, சௌராஷ்டிரா நகர் 7வது தெரு,
சென்னை – 600094.

4. நாராாணயன் க - சிவவாக்கியர்
மாரி பதிப்பகம், புதுச்சேரி – 8

5. மெய்யப்பன் ச - சித்தர் தத்துவம்
மணிவாசகர் பதிப்பகம்,
சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை – 600108.

6. முனைவர் கருணாநிதி ஆ - சித்தர் இலக்கியங்களில் சமூகப்பார்வை
பாவை பப்ளிகேஷன்ஸ்,
142, ஜானி ஜனான் கான் சாலை,
இராயப்பேட்டை,
சென்னை – 600014.

7. முனைவர் பூரணசந்திரன் க - தமிழ் இலக்கியத்தில் ஒடுக்கப்பட்டோர்
அகரம் மனை எண் 1
நிர்மலா நகர், தஞ்சாவூர் – 613007.